**செய்தி வெளியீடு எண்.903** **நாள்.23.10.2008**

2008-ஆம் ஆண்டில் ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ளவிருக்கும் சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களைச் சார்ந்த புனிதப் பயணிகளுக்கு சென்னையில் புத்தறிவுப் பயிற்சி முகாம் நடத்த தமிழ் நாடு மாநில ஹஜ் குழு கருதியுள்ளது. இப்புத்தறிவுப் பயிற்சியின்போது சவூதி அரேபியாவில் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள், பயண விவரங்கள், ஹஜ் பற்றிய வழிமுறைகள், ஹஜ் குழு மற்றும் ஜித்தாவிலுள்ள இந்தியத் துணை தூதரகத்தின் இதர ஏற்பாடுகள், மற்றும் இதர தகவல்கள் பற்றி விரிவாக விளக்கிக் கூறப்படும். இப்பயிற்சி முகாம் தமிழ் நாடு ஹஜ் சர்வீஸ் சொஸைட்டியின் உதவியுடன் நடத்தப்படுகிறது.

2. இப்புத்தறிவுப் பயிற்சி கீழ்க்காணும் இடத்தில் நடைபெறவுள்ளது:–

| **வ. எண்** | **நாள் / கிழமை** | **நடைபெறும் இடம்** | **மாவட்டங்கள் உள்ளடக்கியவை** |
|---|---|---|---|
| 1. | 27–10–2008 திங்கட்கிழமை (தமிழ்) / 28–10–2008 செவ்வாய் கிழமை (உருது) | தமிழ் நாடு பைத்துல் ஹுஜ்ஜாஜ், (ஹஜ் ஹவுஸ்), எண்.2, டிமெல்லோஸ் ரோடு, சூளை, சென்னை–600 112. | சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர். |

3. ஹஜ்ஜை முறையாக நிறைவேற்ற இப்பயிற்சி முகாம்களில், பெண் புனிதப் பயணிகள் உட்பட அனைத்து ஹஜ் பயணிகளும் அதாவது தேர்வு செய்யப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டவர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறும், அதன்மூலம் ஹஜ் பயணத்திற்கான விதிமுறைகள், வழிவகைகள் மற்றும் நடைமுறைகளை விரிவாகத் தெரிந்து கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். பன்னாட்டு பாஸ்போர்ட்டில் தனியார் ஹஜ் நிறுவனங்கள் மூலம் புனித ஹஜ் பயணம் மேற்கொள்ள இருப்பவர்களும் விரும்பினால் இப்புத்தறிவுப் பயிற்சி முகாமில் கலந்து கொள்ளலாம்.

4. இப்புத்தறிவுப் பயிற்சி முகாம்களை நடத்துவதற்காக சிறப்புப் பயிற்சி பெற்ற பயிற்சியாளர்களை மாநில ஹஜ் குழு அனுப்பி வைக்க உள்ளது. ஹஜ் மற்றும் உம்ரா நிறைவேற்றுவது பற்றிய விளக்கங்களை ஆலிம்கள் அளிப்பார்கள்.

5. மேலும், இது குறித்து தகவல் ஏதேனும் ஹஜ் புனிதப் பயணிகளுக்கு தேவைப்படும் பட்சத்தில், தமிழ் நாடு மாநில ஹஜ் குழுவை கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளலாம். (தொலைபேசி எண்கள்: 044–28252519 மற்றும் 044–28227617)

வெளியீடு: **இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**